
# அம்புலி மாமா



குழந்தைகளுக்கான
நாட்டுப்புறப் பாடல்


சித்திரம்: சர்பக் தீப்தா

கதாவின் 300எம் திங்க்புக்




வட்டமான, குண்டு அம்புலி மாமாவே, நில்லு!

எப்படி யிப்படி ஆனாய் நீ, சொல்லு!




குண்டு அம்புலி மாமா உருண்டை அம்புலி மாமா!

அப்பப்போ அரைவெளிச்சக்கிண்ணமாகிறாயே எப்படி?!



அதோ நீ-இரவில் வெளியே!

உன் நண்பர்களாம் மின்னும் நட்சத்திரங்களோடு!



வட்ட வட்ட அம்புலிமாமா பளபளக்கும் அம்புலிமாமா!

பகலில் எங்கே போய்விடுகிறாய்!



அம்புலி மாமா என்று செல்லமாக
அழைக்கப்படும் நிலா மிக மிகத்
தொலைவில் இருக்கிறது.

நிலவுக்குப் போக இன்று நீ நடக்க ஆரம்பித்தால்,
தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தால்,
அப்படி நாளொன்றுக்கு 20 கிலோமீட்டர்கள்
நீங்கள் நடந்தால் நீங்கள் நிலவை
அடையும்போது உங்களுக்கு உங்கள்
பாட்டியின் வயது ஆகிவிடும்!

அதனால்தான் நிலவின் மர்மங்களைக்
கண்டுபிடிக்க மனிதர்கள் ராக்கெட்டில் ஏறி
நிலவுக்குப் பயணமாகிறார்கள்!

நீங்கள் நன்றாக, கவனமாக, ஆர்வமும்
அக்கறையுமாகப் படித்தால் நிலவைப்
பற்றி புதிய பல உண்மைகளை நீங்கள்
கண்டறியக்கூடும்!






நீங்கள் ஒரு விஞ்ஞானியாகலாம்;
அல்லது ஓர் ஓவியராகலாம்

நீங்கள் விரும்பும் யாராகவும் உங்களால் ஆக முடியும். ஆனால், உங்களால் எப்போதுமே ஆகாயத்தில் நிலாவைக் காணமுடியும். ''அம்புலிமாமா! உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும்!'' என்று சொல்ல முடியும்!

உனக்கும் எனக்கும் எல்லோருக்குமாக நிலா எப்போதுமே அங்கேயிருக்கும் என்ற உண்மை எத்தனை இனிமையானது!





# கதையைப் படிப்பதற்கு முன்பாக:

## யோசியுங்கள்

நீங்கள் நிலாவை தினமும் பார்க்கிறீர்களா?

நட்சத்திரங்களை? மேகங்களை?
அவற்றைப் பற்றி வியப்போடு
எண்ணிப்பார்த்திருக்கிறீர்களா?




## கேளுங்கள்! கலந்துரையாடுங்கள்!

கல்பனா சாவ்லா விண்வெளிக்குப் பறந்த முதல் இந்தியப் பெண். குழந்தையாயிருக்கும்போது விமானங்கள் வரைவது அவருக்கு மிகவும் பிடிக்கும்.

நீங்களும் ஒரு நாள் நிலவுக்குப் போக விரும்புகிறீர்களா?

# செயல்படுங்கள்!

நம்முடைய பூமி நம் முன்னோர்கள் நமக்குத் தந்திருக்கும் அன்பளிப்பு. பூமியை அவர்கள் மிகவும் கவனமாகவும் அக்கறையோடும் பார்த்துக்கொண்டார்கள் – நாம் இங்கே நலமாகவும், வளமாகவும் வாழ்வதற்காக.

இப்போது 'நான் உன்னை நேசிக்கிறேன்' 'உன்னை கவனமாகப் பாதுகாப்பேன்' என்று இயற்கையிடம் நாம் சொல்லவேண்டிய நேரம்! இயற்கையைப் பாதுகாக்க நம்மால் என்னவெல்லாம் செய்ய முடியும்?

**தமாஷா சொல்கிறது:**

உங்கள் பள்ளியில் மரங்களை நடலாமா என்று உங்கள் ஆசிரியரிடமோ அல்லது பள்ளியின் தலைமையாசிரியரிடமோ கேட்கவும்.


அதற்கு அனுமதி கிடைத்தால் நீங்கள் நடும் குட்டித் தாவரங்களை அவை மரமாக வளரும் வரை கவனமாகப்பார்த்துக்கொள்ளுங்கள்;

நீங்களும் உங்கள் நண்பர்களும் என்ன செய்தீர்கள் என்று எனக்கு எழுதியனுப்புங்கள்!

உங்கள் மின்னஞ்சலை tamasha!@katha.org. என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

அல்லது Tamasha, c/0 Katha, A3, Sarvodaya Enc;ave, New Delhi 110 017 என்ற முகவரிக்கு தபால் அனுப்பவும்.

உங்கள் அன்பு நண்பன்



**கீதா தர்மராஜன்:** குழந்தைகளுக்கான கதைகள் எழுதுவதை மிகவும் விரும்புபவர். TARGET (செயல் இலக்கு) என்ற குழந்தைகளுக்கான இதழின் ஆசிரியர்களில் ஒருவர். மேலும், பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தின் இதழான பென்சில்வேனிய கெஸட்டிலும் (The Pennsylvania Gazette) எழுதியவர் இலக்கியம் மற்றும் கல்விப் பணிகளில் குறிப்பிடத்தக்க சேவை செய்தமைக்காக இவருக்கு 2012 ஆம் ஆண்டு பெருமைமிகு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

**சர்பக் தீப்தா:** ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக முன்னாள் மாணவி. விருது பெற்ற சித்திரக்கலைஞர். சாப்பாட்டுப்பிரியர்; உலகைச் சுற்றிவருபவர்!

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்தது: லதா ராமக்கிருஷ்ணன்

KATHA

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவிலிருந்து இலக்கியத்திற்குத் தொடரும் இயக்கத்தை சாத்தியமாக்குவதே எங்கள் நோக்கம்.

''இந்திய மணிமகுடத்திலிருக்கும் அருங்கல்வி முத்து கதா''

— Naoyuki Shinohara, Deputy Managing Director, IMF

நகரங்களில் நிலவும் சாதாரண, அசாதாரண துயரங்களைக் கையாளவும் சமாளிக்கவும் மேற்கொள்ளப்படும் படைப்பூக்க முன்முயற்சிகள் எல்லாவற்றுக்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது கதா.

— Charles Landry, *The Art of City Making*

கதாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். அந்த அன்பும் அக்கறையுமே இத்தனை அற்புதச் சித்திரக்கதை நூல்களை கதா உருவாக்கக் காரணம்.

— Time Out

கதா நூல்களில் வரும் குழந்தைகள் செய்வதைப்போல் குழந்தைகளால் தங்கள் சமூகங்களில் நிலையான நிஜமான மாற்றத்தை செய்ய முடியும் என்ற சிந்தனையே கதாவினுடைய பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

— Papertigers

இந்த நூலின் முதல் பதிப்பு 2021இல் வெளியாகியது.
காப்புரிமை © கதா, 2017, 2021
பிரதியின் காப்புரிமை © கதா
ஆங்கில மொழிபெயர்ப்பின் காப்புரிமை © கீதா தர்மராஜன்
விலாசம்: A3, சர்வோதயா என்க்ளேவ்,
ஸ்ரீ அரபிந்தோ மார்க்
புது தில்லி - 110 017.
தொலைபேசி : 91-11 4141 6600 . 4141 6610
மின்னஞ்சல்: editors@katha.org,
இணையதளம்: www.katha.org

**எங்கள் குறிக்கோள்:** ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சிக்கும், அர்த்தத்திற்கும் நன்றாக படிக்க வேண்டும்.

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவு முதல் இலக்கியம் வரையிலான திட்டங்களை செயல்படுத்துகிறோம். வாசிப்பினால் கிடைக்கும் ஆனந்தத்தை குழந்தைகளும் பெரியவர்களும் உணரச்செய்வதே எங்கள் நோக்கம். நாங்கள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தைகளுடன் பணியாற்றி அவர்களை தர நிலை வாசிப்புக்கு கொண்டு வந்துள்ளோம்.

இந்த நூலின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பாளரின் எழுத்துபூர்வ முன் அனுமதி இன்றி இந்த நூலின் எந்தவொரு பகுதியும் எந்த வடிவத்திலும் மீள்பிரசுரம் செய்யப்படலாகாது; பயன்படுத்தப்படலாகாது.

எங்கள் நூல்களின் விற்பனை மூலம் கிடைக்கும் நிகர லாபத்தில் 10% சமூகத்தின் அடித்தட்டிலுள்ள குழந்தைகளின் வாசிப்புக்கும், அவர்களுக்கான வாழ்நாள் முழுவதுமான கற்றல்சார் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.




ஐ.எல்.ஆர் நூலகம் தனித்துவமான புத்தகங்களின் தொகுப்பாகும். வாசிக்கத் தயங்கும் குழந்தைகளும் விரும்பி வாசிக்கத் தொடங்குவார்கள்! சுவாரசியமாக வாசிக்கப் பழகி வாசிப்பின் பல நிலைகளைக் கடந்து தேர்ச்சி பெறுவார்கள்.

சிறந்த உள்ளடக்கமும் அதற்கேற்றாற்போன்ற வடிவமைப்பும் கொண்ட புத்தகங்கள் வாசிப்பின் வெவ்வேறு நிலைகளில் உள்ள குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றி அவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்றன. இந்த நூலகம் இந்தியாவிலிருந்தும் உலக நாடுகளிலிருந்தும் பல அருமையான, தரமான இலக்கியப் படைப்புகளை சேகரித்து வைக்கிறது. எங்களுடைய புத்தகங்கள் கீதா தர்மராஜனின் Story Pedagogy 'கதை வழி கல்வி' என்ற தனிச்சிறப்பான கல்விமுறையை பின்பற்றுகிறது. இந்தக் கல்விமுறை முதல் தலைமுறை வாசகர்களுக்கு வாசிப்பின் ஆனந்தம் கிடைப்பதற்கான வழிகளை அறிமுகப்படுத்துகிறது.

TADAA
மூலமாக :
(Think, Ask, Discuss, Act and Achieve)
யோசி
கேள்
விவாதி
செய்
சாதி

மகிழ்ச்சிக்கும் அர்த்தத்திற்கும் படியுங்கள்

## இண்டிகோ தொடரில் இடம்பெறும்








































**FOR OUR BOOKS**

**www.books.katha.org**

கதைகளின் வழியே இந்தியாவின் பல்கலாச்சார அடையாளம்

— The Pioneer

for children
a katha book
ISBN 978-93-88284-81-3
9 789388 284813
www.katha.org
₹ xxx

மற்ற ஐ எல் ஆர் புத்தகங்கள்